வாய்ந்த தீர்மானத்தை நிறைவேற்றி, காவு கொடுக்கப்பட்ட கச்சத் தீவை காப்பாற்றிட வெற்றிக் களம் அமைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மீனவர்களின் வயிற்றில் பால் வார்த்திட்ட, நாளைய பாரத தேசம், வாழும் மனித தெய்வம், அம்மா அவர்களை வணங்குகிறேன்.

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் தொகுதிக்குட்பட்ட, வெம்பக்கோட்டை ஒன்றியம், ஊத்துப்பட்டியில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிட கோரிக்கை வைத்து, இந்த மாமன்றத்திற்கு அவ்வினா வருவதற்கு முன்பாகவே நிறைவேற்றித் தந்து வரலாறு வாழ்த்துகின்ற வகையில், வளரும் இளம் தலைமுறையினரின் வளர்ச்சிக்காக முத்து முத்தான திட்டங்களை வாரி, வாரி வழங்கி வருகின்ற, வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் சாத்தூர் தொகுதி மக்களின் சார்பிலும் எனது சார்பிலும் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 414, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

414—

புதிய கட்டடம்

***24754—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி, திருவெண்காடு மற்றும் எருக்கூர் ஆகிய பகுதிகளிலுள்ள வேளாண் விரிவாக்க மையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருவெண்காடு, எருக்கூர் மற்றும் சீர்காழி ஆகிய வேளாண்மை விரிவாக்க மையங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதால், புதியதாக கட்டடங்கள் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்ற அழகுத் தமிழ் வார்த்தைக்கு அகில உலகிற்கும் அர்த்தம் தந்திட்ட அம்மா. ஊருணி நிறைந்த நன்னீர் உலகிற்கு உதவுவதுபோல, ஊற்றாகப் பெருகி வந்த உங்களது அன்புக் கருணையால் ஏழை விவசாயிகளின் வாழ்வு வளம் பெறுகின்றது தாயே, (மேசையைத் தட்டும் ஒலி) பசித்தார் பசி களையும் அட்சய பாத்திரமே, மக்கள் திலகம் கண்டெடுத்த எங்கள் சொக்கத் தங்கமே, ஏழைகளைத் தாங்கிநிற்கும் ஏந்தலே, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் இன்றைய தமிழகமே, இரண்டாம் பசுமைப் புரட்சியைக் கொண்டுவந்த நாளைய பாரதமே, பொன்னி நதி காத்திட்ட புண்ணியவதியே, காவேரி தந்த பொன்னியின் செல்வியே, எங்கள் சோழப் பெருவளத் தாயே, தங்களின் புனித பொற்பாதங்களை வணங்குகின்றேன் அம்மா.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் சட்டமன்றத்தில் விதி 110–ன்கீழ் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூட்டுறவுத் துறை, உணவுத் துறை, வேளாண்மைத் துறை, கால்நடைத் துறை திட்டங்களை ஒருங்கிணைத்து, முத்தாய்ப்பான அறிக்கைகளை வெளியிட்டார்கள். கொள்முதல் பொருட்களைப் பதப்படுத்தி, பாதுகாக்க எங்களது சீர்காழி தொகுதியில் உள்ள எருக்கூர் நவீன அரிசி ஆலையில், 25 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நவீன வசதிகளுடன் கூடிய, இரண்டு கட்டமைப்புகள் ரூபாய் 45 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்கள் பசிப்பிணி தீர்ப்பதில்

சஞ்ஜீவி மலை, பகைமுடிப்பதில் ஜான்சி ராணி, (மேசையைத் தட்டும் ஒலி) அறிவூட்டுவதில் கலைமகள், அள்ளித் தருவதில் தன்னிகரில்லாத தரணிபோற்றும் தமிழ் மகள் அல்லவா? நான் அனுதினமும் வணங்கும் எங்கள் அன்னையே, உங்கள் பொற்பாதங்களில் கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, என் சார்பிலும், எனது தொகுதி மக்களின் சார்பிலும் மலர்ப்பாதம் தொட்டு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன் அம்மா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் சீர்காழி, திருவெண்காடு மற்றும் எருக்கூர் ஆகிய பகுதிகளிலுள்ள வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்கள் மிகவும் பழமையானதாகவும், இடியும் தருவாயிலும் இருப்பதால், மழைக்காலங்களில் கட்டடங்களில் இருக்கின்ற பொருட்களும், ஆவணங்களும் தண்ணீர் கசிவால் நனைந்து சேதம் அடைகின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்சொன்ன வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடங்களுக்குப் புதியதாக கட்டடங்கள் கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்று மீண்டும் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதியில் சீர்காழி மற்றும் கொள்ளிடத்தில் இரண்டு பெரிய வேளாண்மை விரிவாக்க மையங்களும், ஆறு துணை வேளாண்மை விரிவாக்க மையங்களும் செயல்பட்டு வருகின்றன. சீர்காழி தொகுதியில் சீர்காழி, திருவெண்காடு மற்றும் எருக்கூர் வேளாண்மை விரிவாக்க மையங்கள் அரசுக் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. எருக்கூர் வேளாண்மை விரிவாக்க மையம் நல்ல நிலையில் உள்ளது. சீர்காழி மற்றும் திருவெண்காடு வேளாண்மை விரிவாக்க மையங்களில் சீரமைப்புப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் செய்ய மதிப்பீட்டு பிரேரணை நாகப்பட்டினம் வேளாண்மை இணை இயக்குநரிடமிருந்து கோரப்பட்டுள்ளது. பிரேரணை பெறப்பட்டவுடன் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2013 மே 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலும், சீர்காழி தொகுதியிலுள்ள கடவாசல், முதலைமேடு, கொள்ளிடம், வைத்தீஸ்வரன்கோவில், காரமேடு ஆகிய பகுதிகளில் சுமார் 35, 40 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட, மிகவும் பழுதடைந்துள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, கட்டித் தருவதற்கு முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரி இருக்கின்ற வேளாண்மை மையங்கள் எல்லாம் பழுதடைந்திருந்தால் அவற்றைச் சீரமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்படும். அப்படி பழுது நீக்க முடியாத அளவுக்கு இருக்குமேயானால், நிதி நிலையை அனுசரித்து புதிய கட்டடம் கட்டுவதற்கான முடிவு மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 415, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*